# 21,டிசம்பர் 1999
# ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிக்கா பண்டாரநாயக்காவை ஏன் ஆதரிக்க வேண்டும்?



ஐம்பது வருடங்களாக பயங்கர இறுசற் காடாக வளர்ந்துவிட்ட பேரினவாத அரசியல் மனோபாவங்களை மாற்ற ஐந்து வருடங்கள் போதுமா? சொல்லுங்கள்...

[illegible]



● "**தமிழ் பேசும் மக்களுக்குப் பிரச்சினை இருக்கிறது! அது அரசியல் ரீதியாக, சமாதான வழியில் தீர்த்து வைக்கப்பட வேண்டும்**" என்று, சிங்கள மக்கள் மத்தியில் துணிந்து கூறியது மட்டுமல்லாமல் அந்த நிலைப்பாட்டில் மாறாமல் நிலைத்து நிற்கும் முதலாவது அரசியல் தலைவர்!

● "**பேரினவாதம் பொது எதிரி! அதை முறியடித்து, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும்**" என்று, மக்கள் ஆதரவை வேண்டி நிற்பவர்!

● "சுதந்திரம் பெற்றதிலிருந்து மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தமிழ் பேசும் மக்கள் மீது காட்டி வந்த பாரபட்சம்தான், இன்றைய '**இரத்தப் புயலுக்கு**' காரணம்!" என்று, அதை நிறுத்த '**மழையாகி**' நிற்பவர்!

● "**தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையில் கடந்த கால சிங்கள அரசியல் தலைமைகள் தீர்க்கதரிசனத்துடன் நடந்து கொள்ளவில்லை**" என்று, அவர்களைக் கண்டிக்கும் அதேவேளை, அந்தப் '**பழிபாவத்தை**' அடுத்த தலைமுறைக்கும் தொடர விடமாட்டேன்! என்று, திடசங்கற்பம் பூண்டு நிற்பவர்!

● வரலாற்றில் முதல் தடவையாக அரசியல் தீர்வொன்றை தைரியமாக முன்வைத்து, அதில் **முஸ்லிம் சமூகத்தின் அபிலாசைகளையும் (அதிகார அலகை) ஏற்றுக் கொண்டவர்!**

● "**சிறுபான்மை மக்களின் உரிமைகளை வழங்காமல் நிம்மதியும் இல்லை; சுபீட்சமும் இல்லை**" என்று, பெரும்பான்மை மக்களின் மனதை வெல்வதற்கு, பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருபவர்!

**● பிற்போக்கு சக்திகளின் ஆதரவுடன் ஜனநாயகத்தை 'சுடுகாட்டுக்கு' அனுப்பிவிட்டு... 'பாஸிஸத்தை' நாட்டில் ஏற்படுத்த நினைக்கும் அதிதீவிர பேரினவாத சக்திகளின் 'தேர்தலை பகிஷ்கரிக்கும்' கோஷத்திற்கு எதிராக ஜனநாயகத்தை வாழவைக்க நிற்கும் ஒரேயொரு ஜனாதிபதி வேட்பாளர்!**

● ஐ.தே.கட்சிக் காலத்தில், **தமிழ் பேசும் மக்களின்மீது துறைமுகத்தில் வீசிய காற்றுக்கூட பட்டதில்லை!** இந்த நிலையில், துறைமுக அபிவிருத்தி அமைச்சைத் தந்து கணிசமான வேலை வாய்ப்புகளை வழங்க இடமளித்தவர்!

● 'வீரவிதான' போன்ற பேரினவாத இயக்கங்களும் 'சோமதேரர்' போன்ற இனவாதிகளும் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக 'கருத்துச் சுதந்திரத்தை' துஷ்பிரயோகம் செய்கின்றனர். 'ரினன்ஸல்' போன்ற வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் மூலம் 'வகுப்புவாத விஷக் காற்று' பரப்பப்படுகின்றது. பேரினவாதிகள் இனத்துவேஷத்தை எழுப்பி.... உள்நாட்டில் வர்த்தக, காணி கொள்வனவுத் தடைகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். இத்தகைய பகைப் புலனில் **தமிழ் பேசும் மக்களைப் பாதுகாக்கும் 'ஒட்சிசன் சிலிண்டராக' விளங்குபவர்! "தொடர்ந்தும் கருத்துச் சுதந்திரம், துஷ்பிரயோகம் செய்யப்பட்டால்.... 'தடை' நடவடிக்கை எடுப்பேன்!" என்று, எச்சரித்து நிற்பவர்!**

● **"நண்பன் யார்? எதிரி யார்?" என்று, தெரியாமல் 'புரட்சி' நடத்தி தோல்வியுற்ற அதிதீவிர தோழரின் சிஷ்யர்கள் இன்று, 'அந்த இருண்ட யுகத்தை' மறந்துவிட்டு 'நண்பனுக்கு' எதிராக போர்க்கொடி தூக்கியிருக்கும் நிலையிலும் அவர்களின் உணர்வுகளை மதித்து நிற்கும் ஒரே தலைவர்!**

● முஸ்லிம் சமூகத்தின் முன்மாதிரியான தலைமைத்துவத்தையும் அதன் கீழ் திரண்டு வரும் மக்கள் சக்தியையும் கவனத்தில் எடுத்து, ஆட்சியை அமைக்க தமக்கு உதவியதை நன்றியுடன் நினைவு கூர்பவர். **முஸ்லிம் சமூகத்தின் குரலாக முஸ்லிம் காங்கிரஸை அங்கீகரித்திருப்பவர். அதேவேளை தமிழ் மக்களின் பிரதான குரல் விடுதலைப் புலிகள்தான் என்றும் ஏற்றுக் கொண்டு அவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்தவர்!**

● வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள், **ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் மனித விழுமியங்களெல்லாம் மறுக்கப்பட்டவர்களாக அகதி முகாம்களில் 'அழிந்து' கிடந்தனர்.** அந்த மக்களுக்கு மீள் குடியேற்றமும் தனியான வாழ்விடமும் அடிப்படைத் தேவைகளான கல்வி, சுகாதார, நீர், மின்சாரம் போன்ற ஏனைய வசதிகளையும் நஷ்டஈட்டு, நிவாரண உதவிகளையும் **அமைச்சர் அஷ்ரஃப் வழங்கினார் என்றால் அத்தனைக்கும் பாத்திரமாக அமைந்தவர்!**

● குறுக்கு வழியில் பணம் குவிக்க நினைக்கும் ஒரு சில தனியார் நிறுவனங்களும் தனவந்தர்களும் சாதாரண மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிப்பதில்லை. அவர்கள், தமக்கு சாதகமான ஓர் ஆட்சியை மீண்டும் அமர்த்தி நாட்டைச் சூறையாடக்



கனவு காண்கிறார்கள்! இந்த நிலைமையில், **நாட்டின் நலன்களை பாதுகாக்கக்கூடிய ஒரேயொரு தலைமைத்துவமாக பிரகாசிப்பவர்!**

● வாழ்க்கைச் செலவு விஷம் போல ஏறுகிறது! உண்மைதான்! எந்த ஆட்சியால்தான் அதைக் குறைக்க முடிந்தது? ஆனால், சந்திரிகா ஆட்சியின் பொருளாதாரக் கொள்கைகளால் அதைக் குறைத்திருக்க முடியும். எனினும், **'யுத்த அரக்கன் அதை விழுங்குகிறான்!' என்ற, உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.**

அதனாற்றான், யுத்தத்தை நிறுத்த - பேச்சுவார்த்தை நடத்த - அரசியல் தீர்வைக் காண மக்களின் ஆணையை, குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் ஆணையைக் கேட்டு நிற்பவர். அரை நூற்றாண்டாக, **'பயங்கர விலங்குகள் வாழும் வெப்ப வலய இறுசற் காடாக'** வளர்ந்து விட்ட **'இலங்கையின் அரசியல் மனோபாவங்களை' மாற்ற, ஐந்து வருடங்கள் போதுமா? சொல்லுங்கள்! அதனாற்றான் இன்னொரு சந்தர்ப்பத்தை வேண்டி நிற்பவர்!**

● **கடந்த ஐ.தே.கட்சி ஆட்சியில் புனர்வாழ்வு அமைச்சு தமிழ் பேசும் மக்கள் மீது, மிக மோசமான பாரபட்சப் போக்கையே கடைப்பிடித்தது. ஆனால், 94ல் பொ.ஐ.ஐ.முன்னணி ஆட்சியில் தான் தமிழ் பேசும் மகன் ஒருவரை, அந்த அமைச்சுக்கு நியமித்து புனர்வாழ்வு புனர்நிர்மாண அபிவிருத்தியை உத்வேகப் படுத்தியவர்!**

● **வடகிழக்கு யுத்த நெருக்கடிக்கு மத்தியிலும் அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களில் குறிப்பாக, தமிழ் மக்கள் பாதிக்கப்பட்ட இடங்களில் முன்னொரு போதுமில்லாத அளவுக்கு புனர்வாழ்வு புனர்நிர்மாண அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன.....**

● **அம்பாறை மாவட்டத்தில்.... மல்வத்தை, வளத்தாப்பிட்டி கண்ணகிபுரம்.... போன்ற கிராமங்களில், சகல அடிப்படை வசதிகளையும் கொண்ட மாதிரிக் கிரமங்கள் அமைக்கப்பட்டன.**

● காரைதீவில்.... சுவாமி விபுலானந்தர் நினைவாக, 'மணி மண்டபம்' அமைக்கப்பட்டதோடு, பிரதேச செயலகம், தபாற் கந்தோர் நிர்வாகக் கட்டிடம், விபுலானந்த, சண்முகா மகா வித்தியாலயங்களுக்கு கட்டிடத் தொகுதிகளும் வழங்கப்பட்டன. குறிப்பாக, சண்முகா வித்தியாலயத்திற்கு இந்து கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் ஆராதனை மண்டபம் அமைக்கப்பட்டது.

● கல்முனை உவெஸ்லி கல்லூரியிலும் காமல் பாத்திமா கல்லூரியிலும் மாடிக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டு கல்வி அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டது.

● ஆலையடிவேம்பில் கலாச்சார மண்டபம் அமைக்கப் பட்டதோடு ஆஸ்பத்திரியும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

● திருக்கோவில், கோமாரி, பொத்துவில்.... போன்ற கிராமங்களில் பாடசாலைக் கட்டிடங்களும் கல்வி அபிவிருத்திக்கான ஏனைய வசதிகளும் மேற்கொள்ளப்பட்டன.

● பரந்த அளவில் பாதிக்கப்பட்ட தமிழ் அரச ஊழியர்களுக்கும தனியாருக்கும் நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

● **நெதர்லாந்து அரசின் உதவியாகக் கிடைத்த 3000 வீடுகளில் 1000 விடுகளை தமிழ் மக்களுக்கும் 1000 வீடுகளை சிங்கள மக்களுக்கும் 1000 வீடுகளை முஸ்லிம் மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதைத்தவிர, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் ஊடாகவும் வீடமைப்புக்கான நன்கொடைகளும் வழங்கப்பட்டன.**

● கல்முனைப் பிரதேசத்திலுள்ள 1500 தமிழ் குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வதற்காக கொடுப்பனவு வழங்கப்பட்டது.

● வன்செயலால் உயிரிழந்தவர்களுக்கு மரணக் கொடையும் கடும் பாதிப்புக்குட்பட்டோருக்கு நஷ்டஈடும் வழங்கப்பட்டன.

● திருமலையில்.... கப்பல் துறை, பாரதிபுரம், சிப்பித்திடல்.... போன்ற இடங்களிலும் வவுனியாவில்.... சிதம்பரபுரம்.... போன்ற இடங்களிலும் மீளக்குடியேற்ற கிராமங்கள் அமைக்கப்பட்டன.



● மட்டக்களப்பில்.... கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு விஞ்ஞான ரசாயன ஆய்வுகூட கட்டிட தொகுதியும் நிர்வாக கட்டிடத் தொகுதியும் வழங்கப்பட்டது.

● மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, பூரண அபிவிருத்தி செய்யப்பட்டு, சிறுவர் பராமரிப்பு விடுதி, அவரச சிகிச்சைப் பிரிவு ஆகியவை புனர்நிர்மாணம் செய்யப்பட்டன.

● மட்டக்களப்பு மெதடிஸ்ற் மத்திய கல்லூரிக்கும் மகாஜனக் கல்லூரிக்கும் கேட்போர்கூடங்கள் அமைக்கப் பட்டதோடு, சிசிலியா கொன்வென்ற் கல்லூரிக்கு கட்டிடத் தொகுதியும், சென் மைக்கல் கல்லூரிக்கு கட்டிடத் தொகுதியும், கேட்போர் கூடமும் வழங்கப்பட்டது.

● எருவில் கண்ணகி வித்தியாலயத்திற்கு கட்டிடம் அமைக்கப்பட்டதோடு, கோட்டைக்கல்லாறு, களுதாவளை மகாவித்தியாலயங்களுக்கு ஆராதனை மண்டபங்களும் அமைக்கப்பட்டன.

● மண்டூர் கோட்டைமுனை மகாவித்தியாலயத்திற்கும் கன்னங்குடா மத்திய மகா வித்தியாலயத்திற்கும் கட்டிட தொகுதிகள் வழங்கப்பட்டதோடு, துறைநீலாவணை மகா வித்தியாலயத்திற்கு மூன்று மாடிக் கட்டிடமும் கோயில் போரைதீவு பாடசாலை மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டு கட்டிட வசதிகளும் அமைத்து கொடுக்கப்பட்டன.

● திருப்பெருந்துறை, ஐயங்கேணி.... ஆகிய இடங்களில் மீளக் குடியேற்றக் கிராமங்கள் அமைக்கப்பட்டன.

● கோட்டைக் கல்லாற்றில் புதிய தபாலகக் கட்டிடம் அமைக்கப்பட்டது.

● கொக்கட்டிச்சோலைக் கிராமத்தில் கலாசார மண்டபம் அமைக்கப்பட்டது.

● மகிழூர் வைத்தியசாலை புனரமைக்கப்பட்டது.

● **போர் நடந்து கொண்டிருக்கும் சூழ்நிலையிலும் மக்களின் மத, கலாசார விழுமியங்களை பேணிப் பாதுகாக்கும் விதத்தில் இந்து வழிபாட்டுத்தலங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன.**

● இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பலம் கிழக்கு! - அதிலும் அம்பாறை மாவட்டம்!! அங்கு, பல்கலைக்கழகம் அமைப்பதற்கு, ஒலுவில் துறைமுகம் தருவதற்கு, அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரியை வளர்த்தெடுப்பதற்கு, கல்முனை தெற்கு மாவட்ட வைத்தியசாலையை உருவாக்குவதற்கு, ஒலுவிலில் மற்றொரு மகாபொல கல்விப் பயிற்சி நிறுவனத்தை அமைப்பதற்கு, சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்துடன் இணைப்பதற்கு, கல்முனையில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு, மாத்தளையில் ஆமினா மகா வித்தியாலயத்திற்கு காணி பெறுவதற்கு....

**இப்படி.... இன்னும் இன்னும் எத்தனை எத்தனையோ வரலாறு காணாத கோடான கோடி ரூபாக்களுக்கான பாரிய அபிவிருத்தியை கிழக்கில் மேற்கொள்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கருவியாக இருந்தார் என்றால் அதற்கெல்லாம் கர்த்தாவாக இருந்தவர்!!**

● போர் நடந்து கொண்டிருக்கும் எந்தவொரு நாட்டிலும் நடந்திராத 'நவீன நகர அபிவிருத்தி அதிசயம்' காத்தான்குடியில் நடைபெற்றது. அதேவேளை, ஏறாவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி, மீராவோடை, காவத்தமுனை.... போன்ற கிராமங்களின் மக்களும் அரச நிறுவனங்களும் என்றுமே இல்லாத அளவில் புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்திகளை பெற்றது. இதற்கெல்லாம் அடிப்படையாக அமைந்தவர்!

● அவுஸ்திரேலிய அரசின் உதவியுடன் கல்முனைக் கரையோர பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரமாண்டமான பாரிய குடிநீர்த்திட்டத்தை அமைச்சர் அஷ்ரஃப் செயற்படுத்தினார் என்றால்.... அதற்கு ஆதர்சமாக அமைந்தவர்!

● ஐ.தே.கட்சி ஆட்சியில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் எந்தவித நிபந்தனையுமில்லாமல் கிழக்கை வடக்கோடு இணைத்துவிட்டு.... பின்பு, வடக்கிலிருந்து கிழக்கைப் பிரித்து தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டது!



இப்போது.... ''இரண்டு வருடங்களுக்கு புலிகளிடம் ஆட்சியைக் கொடுப்பேன்'' என்று ஐ.தே.கட்சி கூறுகின்றது! அது..... எவ்வாறாயினும் ஐ.தே.கட்சியின் இந்த முயற்சிகள், வடகிழக்கு முஸ்லிம்களை தொடர்ந்தும் பலிகொடுப்பதாகவே அமையப் போகிறது! எனவே, இந்தப் பகைப் புலனில் முஸ்லிம்களைப் பாதுகாக்கக் கூடிய பாதுகாப்புக் கவசமாகத் திகழ்பவர்!

**ஐ.தே.கட்சி ஒரு மாற்று யோசனையை முன்வைக்காமல்.... வெறுமனே தீர்வுத் திட்டத்தை விமர்சிக்கின்ற இன்றைய சூழ்நிலையில் 'அரசியல் தீர்வை அமுல்படுத்தி தமிழ் பேசும் மக்களுக்குரிய சட்டரீதியான உரிமைகளை வழங்கியே ஆகவேண்டும்' என்று, மீண்டுமொரு முறை மக்கள் ஆணையை வேண்டி நிற்பவர்!**

● வட-கிழக்குக்கு வெளியே, முஸ்லிம்கள் செறிந்து வாழும் பேருவளை, கலகெதர, குருநாகல், மாத்தளை... போன்ற இடங்களில இனத் துவேஷிகளால் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட பொழுது, அவர்களிருந்து பாதுகாப்பு அளித்தவர்!

● எதிர்காலத்தில், தேசிய மீலாத் விழாக்களை நடத்துவதற்கு பிரத்தியேக நிதி ஒதுக்கீட்டைச் செய்து, அதனூடாக அந்தந்தப் பிரதேசங்களில் துரித அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருப்பவர்.

● தமிழ் பேசும் மக்களுக்கு நகரப் புறங்களில் வசதியான கல்விக்கூடங்கள் இல்லாதிருக்கும் நிலையில், அங்குள்ள சிங்களமொழிமூல முன்னணிப் பாடசாலைகளில் தமிழ்மொழிமூல மாணவர்களும் கற்பதற்கு உயரிய கல்வித் திட்டமொன்றை வகுத்து செயற்பட்டு வருபவர்! அத்துடன், கொழும்பிலும் கண்டியிலும் முஸ்லிம் ஆண்கள் பாடசாலைகளை அமைத்துத் தருவதற்கு இணங்கியிருப்பவர்!

● தமிழ்மொழிமூல முஸ்லிம் பாடசாலைகளின் தரத்தை மேம்படுத்தவும் அங்கு நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பவர்!

● முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் வேண்டுகோளிற்கிணங்க, சிங்களமொழிமூல பாடசாலைகளில் தமிழையும், தமிழ்மொழிமூல பாடசாலைகளில் சிங்களத்தையும் கற்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளை, சிங்களமொழிமூலப் பாடசாலைகளில், தமிழ் கற்பிப்பதற்கு சிங்கள மொழியில் சித்தியடைந்த சிறுபான்மைச் சமூகங்களுக்கு முன்னுரிமை வழங்க முன்வந்திருப்பவர்!

● நீலம், பச்சை, சிவப்பு என்ற வர்ணபேதம் பாராமல் நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு "தேசிய அணியை" உருவாக்கி, சிங்கள தமிழ் முஸ்லிம் மக்கள் உரிமையுடன் வாழும் சூழ்நிலையை உருவாக்குவதற்கு உழைத்து வருபவர்!

● சுதந்திரம் கிடைக்கப் பெற்ற காலத்திலிருந்து அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்ட காலம் வரை தமிழ்பேசும் மக்களுக்கு இழப்புகள் ஏற்பட்டதோடு தமிழ் மொழியில் நிர்வாகம் செய்யும் உரிமையும் மறுக்கப்பட்டது. எனவே கிழக்கின் கரையோர மாவட்டம் தமிழ் பேசும் மக்களின் தவிர்க்க முடியாத தாகமாகியது!

அப்போது.... ஆறில் ஐந்து பங்கு அறுதிப் பெரும்பான்மையுடன் இருந்த ஜே.ஆரின் ஆட்சி, அதை நிறைவேற்றி இருக்கலாம். ஆனால், பேரினவாதத்தின் தலைமகன் 'ஜேஆரும்' அவரின் தாஸர்களும் அதைச் செய்ய விரும்பவில்லை! ஆயினும் சந்திரிகா, ஜனாதிபதியானதும் 'கல்முனைக் கரையோர மாவட்டத்தை' உருவாக்கப் போவதாக வாக்களித்திருப்பவர்!

● "அரசியல் தீர்வுகாணும் முயற்சிக்கு ஆகக் கூடிய பங்களிப்பைச் செய்தவர் யார்?" "சந்திரிகா பிரச்சினையைத் தீர்க்க ஓர் அரசியல் ஆலோசனையை முன்வைத்தார்! ஆனால், எதிர்க்கட்சியும் தலைவரும் என்ன செய்தார்? அதற்கு ஒத்துழைப்பாவது கொடுத்தாரா?" என்ற, கேள்விகளை எழுப்பியாவது, தமிழ் பேசும் மக்கள் சந்திரிகாவை ஆதரித்தே ஆக வேண்டும்!

● இத்தகைய ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு தோற்றுவாயாக இருந்து தமிழ் பேசும் சமூகங்களுக்கு பாரிய நன்மைகளை வழங்கியும் - வழங்கவுமுள்ள ஜனாதிபதி வேட்பாளர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்களை ஆதரிப்பது, தமிழ் பேசும் மக்களின் தார்மிக பொறுப்பும் கடமையுமல்லவா? எனவே அவரின் வெற்றியை தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மை வாக்குகளால் உறுதிப் படுத்துவோம்!

இப்பிரசுரம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மூத்த துணைத் தலைவர் கவிஞர் மருதூர்க்கனி அவர்களால் 53, வொக்ஷோல் லேன், கொழும்பு-02ல் உள்ள "தாருஸ்ஸலாம்" தலைமையகத்திலிருந்து 04.12.1999ல் வெளியிடப்பட்டது.



## 'மழை மேகங்களுக்கும் மழைத் துளிகளுக்கும்.....'

"நாட்டின் நலனுக்காகவும் குடும்பத்தின் நலனுக்காகவும் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட மகளிர் - மழை மேகங்களுக்கும் சிறுவர் - மழைத் துளிகளுக்கும் பல்வேறு பாதுகாப்பு நிவாரணங்களை ஏற்படுத்தியிருக்கிறோம்.

மகளிர் உரிமைகளைப் பேணிப் பாதுகாத்தல், திருமண வாழ்வுக்கான பாதுகாப்பளித்தல், தவறான நடத்தைகள் ஊழல்களிலிருந்து பாதுகாத்தல் ஆகியவற்றுக்கான சட்டங்களை இயற்றி நடைமுறைப் படுத்தியிருக்கிறோம்.

பராமரிப்பு உரிமைகளைக் கோருவதற்கான சட்டங்களின் மூலமும் சிறுவர்களைத் தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்கான சட்டங்களின் மூலமும் அவர்களுக்கு சட்டமுறையான பாதுகாப்பை உருவாக்கியிருக்கிறோம்.


தனியார் துறையைப் பொறுத்தவரை உங்களுக்கு விடுதி வசதிகளையும், சுகாதார வசதிகளையும் வழங்குவதற்கு அவர்களுக்கு ஊக்கமளித்திருக்கிறோம்.

வெளிநாடுகளில் தொழில் புரியும் தாய்மார்களின் பிள்ளைகளுக்காக நலன் ஓம்பும் பாதுகாப்பு கல்வி.... ஆகியன பற்றி, விசேட செயற் திட்டமொன்றை வகுத்து செயற்படுத்தி வருகிறோம்.

மழை மேகங்களதும் மழைத்துளிகளதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு, எமது அரசாங்கம் மிகுந்த அக்கறையுடன் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தப் பயன்களை மேலும் முன்னெடுக்கவும் பயனார்ந்த வகையில் செயற்படுத்தி அபிவிருத்தி செய்யவும் நாங்கள், எம்மை அர்ப்பணித்திருக்கிறோம்."

**சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க**

"சுதந்திரம் பெற்றதிலிருந்து மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தமிழ் பேசும் மக்கள் மீது காட்டி வந்த பாரபட்சம்தான், இன்றைய 'இரத்தப் புயலுக்கு' காரணம்!" என்று, அதை நிறுத்த 'மழையாகி' நிற்பவர்!



"தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையில் கடந்த கால சிங்கள அரசியல் தலைமைகள் தீர்க்கதரிசனத்துடன் நடந்து கொள்ளவில்லை" என்று, அவர்களைக் கண்டிக்கும் அதேவேளை, அந்தப் 'பழிபாவத்தை' அடுத்த தலைமுறைக்கும் தொடர விடமாட்டேன்! என்று, திடசங்கற்பம் பூண்டு நிற்பவர்!